# பைபிள் வசனங்கள்

2






நான் உமக்கு
விரோதமாய்ப்
பாவஞ்செய்யாத
படிக்கு, உமது
வாக்கை
என்னிருதயத்தில்
வைத்து
வைத்தேன்.
சங்கீதம் 119:11


உன் இளமையைக்
குறித்து ஒருவனும்
உன்னை அசட்டை
பண்ணாத
படிக்கு, நீ
வார்த்தையிலும்,
நடக்கையிலும்,
அன்பிலும், ஆவியிலும்,
விசுவாசத்திலும்,
கற்பிலும்,
விசுவாசிகளுக்கு
மாதிரியாயிரு.
1 தீமோத்தேயு 4:12


சங்கீதம் 119:9
வாலிபன் தன்
வழியை எதினால்
சுத்தம்பண்ணுவான்?
உமது வசனத்தின்படி
தன்னைக் காத்துக்
கொள்ளுகிறதினால்
தானே.


வாலிபனே ! உன் இளமையிலே
சந்தோஷப்படு, உன் வாலிப
நாட்களிலே உன் இருதயம் உன்னைப்
பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின்
வழிகளிலும்,
உன் கண்ணின்
காட்சிகளிலும் நட;
ஆனாலும் இவை
யெல்லாவற்றி
னிமித்தமும் தேவன்
உன்னை நியாயத்திலே
கொண்டுவந்து
நிறுத்துவார் என்று அறி.
பிரசங்கி 11:9


என் மகனே, உன் தகப்பன்
கற்பனையைக் காத்துக்கொள்; உன்
தாயின் போதகத்தைத் தள்ளாதே.
நீதி. 6:20


இதினிமித்தம் புருஷன் தன்
தகப்பனையும் தன் தாயையும் விட்டு,
தன் மனைவியோடே
இசைந்திருப்பான்;
அவர்கள் ஒரே
மாம்சமாயிருப்பார்கள்.
ஆதி. 2:24



குணசாலியான
ஸ்திரீயைக்
கண்டுபிடிப்
பவன் யார்?
அவளுடைய
விலை
முத்துக்களைப்
பார்க்கிலும்
உயர்ந்தது.
நீதி. 31:10


குணசாலியான ஸ்திரீ
தன் புருஷனுக்குக்
கிரீடமாயிருக்கிறாள்;
இலச்சை உண்டு
பண்ணுகிறவளோ
அவனுக்கு எலும்புருக்கி
யாயிருக்கிறாள்.
நீதி. 12:4


நீதி. 21:9
சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில்
குடியிருப்பதைப் பார்க்கிலும், வீட்டின்மேல்
ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம்.


சங்கீதம் 128:3
உன் மனைவி உன் வீட்டோரங்களில்
கனிதரும் திராட்சக்கொடியைப்போல்
இருப்பாள்;...

# பைபிள் வசனங்கள்

2

